1987 ஏப்ரல் 28]

(ஈ) விருதுநகர் வட்டத்தில் சில ஊர்களில் ஆற்றுநீரில் கழிவுநீர் கலத்தல்

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் வட்டம், ஆவுடையார்புரம், மன்னார் கோட்டை ஆகிய ஊர்களில் ஆற்று நீரில் கழிவு நீர் கலப்பதால் பொது மக்கள் பாதிப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

காமராசர் மாவட்டத்தில், விருதுநகர் தாலுக்காவில் ஆவுடையார்புரம் மற்றும் மன்னார்கோட்டை ஆகிய கிராமங் கள் உள்ளன. அவைகள் இரண்டும் விருதுநகரிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளன. இக்கிராமங்கள் விருதுநகர் உள்ளாட்சி மன்ற நிர்வாகத்தின்கீழ் உள்ளன. ஆவுடையார் புரத்திலும் மன்னார்கோட்டையிலும் மக்கட்தொகை முறையே 3,500 மற்றும் 1,500 ஆகும்.

ஆவுடையார்புரத்தில் உள்ள திறந்த வெளிக் கிணற்றின் தண்ணீர் விசை பம்பு மூலம் மேல்நிலைத் தொட்டிக்கு ஏற்றப் பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது. மக்கள் இத்தண்ணீரை பாத்திரங்கள் கழுவி சுத்தம் செய்வதற்காக பயன்படுத்தி வருவதாகத் தெரியவந்தது. இதைத் தவிர ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளிலிருந்து பெறப்படும் தண்ணீரையும் மக்கள் உபயோகப்படுத்துகின்றனர். குடிநீருக்காக, இக்கிராமத்தி லிருந்து 500 மீட்டர் தொலைவில் ஓடும் கௌசிகா ஆற்றுப் படுகை நீரினை மக்கள் உபயோகப்படுத்துகின்றனர். இல்லங் களிலிருந்து, துவைப்பதாலும், குளிப்பதாலும் வெளியேறும் கழிவுநீர் கிராமத்தில் அமைந்திருக்கும் இரண்டு குட்டைகளில் வெளியேற்றப்படுகிறது. மன்னார்கோட்டையில் குடிநீர் உபயோகத்திற்காக ஒரு ஆழ் துளைக் குழாய் கிணறு உள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1987 ஏப்ரல் 28

கௌசிகா ஆறு வற்றாத ஜீவநதியல்ல. மழைக்காலங்களில் மட்டும் தண்ணீர் இவ்வாற்றில் ஓடுகின்றது. விருதுநகர் நகராட்சியிலிருந்து சுத்திகரிக்கப்படாத அன்றாடக் கழிவுநீரின் ஒரு பகுதி இந்த ஆற்றில் செல்லுகின்றது. நாளொன்றுக்கு சுமார் 1,095 கிலோ லிட்டர் அன்றாடக் கழிவு நீரை சேகரித்து சல்லடைக் கழிப்புக்குப் பின்னர் கழிவுநீர் பண்ணைக்கு அனுப்பப்படுகின்றது. இந்நகராட்சிக்குச் சொந்தமான 125 ஏக்கர் நிலத்தில் 16 ஏக்கர் நிலம் கினிப் புல்பண்ணை வளர்ப்பதற்கு கழிவுநீர் பயன்படுத்தப்படுகின்றது. கழிவுநீர் ஐந்து வடிமுனைகள் மூலமாக கௌசிகா ஆற்றுக்குச் செல்கிறது. இவ்வாற்றின் குறுக்கே பொதுப்பணித் துறையினர் குள்ளூர் சந்தை அணையைக் கட்டியுள்ளனர். கௌசிகா ஆறு மழைக் காலங்களில் மட்டுமே தண்ணீரைப் பெறுகின்றது. தண்ணீர் அணைக்கட்டினுள்ளேயே தேக்கி வைக்கப்படுகின்றது. ஐந்து வடிமுனைகளிலிருந்து வெளியேற்றப்படும் அன்றாடக் கழிவு நீரானது அணைக்கட்டின் மேற்பகுதியிலேயே சென்று அடைகின்றது. அணைக்கட்டில் நிரம்பி வழியும் தண்ணீர் மட்டுமே ஆற்றின் கீழ்ப்பகுதியைச் சென்று அடைகின்றது.

ஆவுடையார்புரம், மக்கள் குடிநீருக்காக கௌசிகா ஆற்றுப் படுகையிலிருந்து தண்ணீர் எடுக்கும் இடம், அணைக்கட்டின் கீழ்ப்பகுதியில் 10 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. குடிநீருக்காக ஆற்றின் படுகையிலிருந்து எடுக்கப்படும் தண்ணீரின் மாதிரி மற்றும் ஆவுடையார்புரத்திலுள்ள திறந்த வெளிக் கிணறு மற்றும் ஆழ்துளைக் குழாய் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட தண்ணீரின் மாதிரிகள் சென்னை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய பரிசோதனைக் கூடத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டது. குடிநீருக்குப் பயன்படுத்த ஆற்றுப் படுகையிலிருந்து எடுக்கப்படும் நீரானது மற்ற நீர் ஆதாரங்களிலிருந்து பயன்படுத்தப்படும் நீரைவிட நன்றாக உள்ளது என்பது பகுப்பாய்வு அறிக்கையின்படி தெரிய வந்தது.

இரயில்வே பாலத்திற்கு அருகில் உள்ள மூக்காரமன்பட்டி கழிவுநீர் வெளியேற்றும் விசைப்பம்பு நிலையத்தின் மேல்பகுதி, நகராட்சி கழிவுநீர் விசைப்பம்பு நிலையம் அருகிலுள்ள ஆற்றின் அருகில் உள்ள வடிமுனைகளிலிருந்து கழிவுநீர் மாதிரி மற்றும் குள்ளூர் சந்தை அணையிலிருந்து எடுக்கப்பட்ட நீரின் மாதிரிகள்

1987 ஏப்ரல் 28] [திரு. ப. உ. சண்முகம்]

சேகரிக்கப்பட்டு வாரிய ஆய்வுக்கூடத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. குள்ளூர் சந்தை அணையின் மேற்பகுதியில் உள்ள அன்றாடக் கழிவுநீரின் தன்மை, அது அணையின் விளிம்பிலிருந்து வழியத் தொடங்கும் பகுதியை அடைவதற்கு முன்னர் நல்ல மேம்பாடு அடைந்திருப்பது பகுப்பாய்வு அறிக்கையிலிருந்து தெரியவந்தது.

விருதுநகர் நகராட்சி தன்னுடைய 25—11—86 நாளைய தீர்மானம் எண் 710-ல் தனது பகுதியிலிருந்து அன்றாடக் கழிவு நீர் ஆற்றை சென்று அடையாவண்ணம் தடுப்பதற்காக ரூ. 19 இலட்சம் மதிப்பீட்டில் கருத்துரு ஒன்றிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் இதற்காக ஆகும் செலவை கடனாகவோ அல்லது மானியமாகவோ பெற அரசை அணுகவும் மற்றும் உதவி பெற புதுடெல்லியில் உள்ள தூசு நில மேம்பாடு வாரியத்தை அணுகவும் முடிவு செய்துள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இதனைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்த அறிக்கையில் விருதுநகர் நகராட்சியின் கழிவு நீர் கௌசிகா நதியில் கலக்கிறது என்று கொடுத்திருக்கிறார்கள். இந்தக் குடி தண்ணீரை ஆவுடையார்புரம் மக்கள் அருந்துவதாகவும் கொடுத்திருக்கிறார்கள். விருதுநகர் நகராட்சியிலிருந்து கழிவு நீர் ஆற்றில் கலக்காமல் இருக்க தடுப்புச் சுவர் கட்டும் நடவடிக்கைக்காக புதுடில்லியில் உள்ள தூசு நில மேம்பாட்டு வாரியத்தை அணுகி இருப்பதாக அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். அந்தத் தடுப்புச் சுவரை கட்ட அரசு ஒரு கால வரம்பை நிர்ணயிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கழிவு நீரை மக்கள் குடிப்பதில்லை. கழிவு நீர் ஆற்றில் போக வாய்ப்பு இருக்கிறது என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஆற்றிலே கிணறு எடுத்து, அதிலிருந்து தண்ணீரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன யோசனையை அரசு பரிசீலிக்கும்.

[1987 ஏப்ரல் 28

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆவுடையார்புரம் பொது மக்கள் அந்த ஆற்றிலுள்ள நீரை அருந்துவதாக அமைச்சரவர்கள் கொடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. மேலும் 4 மாதங்களுக்கு முன்பாக அந்தத் தண்ணீரை அருந்திய குழந்தைகளுக்கு எல்லாம் இளம் பிள்ளை வாதம் ஏற்பட்டதாகவும், அவர்கள் விருதுநகர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தத் தண்ணீரை அருந்துவதற்குத் தடை விதித்ததாகவும அந்தப் பகுதி பத்திரிகைகளில் செய்தி வந்தது. ஆனால் மாசுக் கட்டுப்பாடு வாரியம் அந்தத் தண்ணீரை அருந்துவதற்கு எந்தத் தடையும் இல்லை, தண்ணீர் சுத்தமாக இருக்கிறது என்று அறிக்கை கொடுத்திருக்கிறது. ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுத்த அறிக்கை சரியா அல்லது இப்போது அமைச்சரவர்கள் கொடுத்த அறிக்கை சரியா என்பது தெரியவில்லை. ஆதலால் அமைச்சரவர்கள் மீண்டும் இதில் கவனம் செலுத்தி, இந்த ஆற்றுத் தண்ணீரை அருந்தத் தடை விதிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை கொடுத்ததாகத் தகவல் இல்லை. அது கிடைக்குமானால், அது குறித்து அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

(உ) பெரம்பலூர் நேரு சர்க்கரை ஆலைக் கழிவுநீரால் பாதிப்பு

டாக்டர் க. நல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் நேரு சர்க்கரை ஆலையின் கழிவு நீராலும் புகையாலும் அப்பகுதி மக்கள் பாதிக்கப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.